**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.56/2025 – PW- 8**

| | |
|---|---|
| Name | திரு.பாஸ்கரன் |
| Husband/Father Name | ஆறுமுகம் |
| Village /Area | நாகவேடு |
| Taluk | நெமிலி |
| Occupation | டெய்லர் |
| Age | 55 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த சுமார் 8 வருடங்களுக்கு முன்பு நாகவேடு பஸ் நிறுத்தம் அருகே நான் நின்றுக்கொண்டிருந்த போது போலீசார் அங்கிருந்த நபர்களை அழைத்து விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள். பருத்திப்புத்தூரில் சண்டை நடந்தது விஷயமாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள். எங்களை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் இருந்த மெய்காந்த மூர்த்தி என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். அந்த சாட்சி கையொப்பம் **அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.5** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் இருந்த மெய்காந்த மூர்த்தி என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் என்ன காரணத்திற்காக கையொப்பம் இட்டேன் என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியும். நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் பொய் கூறுகிறேன் என்றும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் போலீசாருக்கு பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.13 17:19:03 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.